திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 286 முதல் 291 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

முற்பகல் 11-30

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும் என்பதற்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் சூழ்ச்சி வலைகளைத் தகர்த்து மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து, தருமத்தையும், நீதியையும் நிலைநாட்டிய சத்தியத் தாய், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

2014-2015 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 226 முதல் 234 வரையிலான 9 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் 3-9-2015 அன்று தெரிவித்த கருத்துக்கு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி சட்டமன்றத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் நேற்று இங்கே மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோது ஒரு பிரச்சினையை சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதாவது, "புள்ளம்பாடிக்கும், இருதயபுரத்திற்கும் இடையிலுள்ள நந்தியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி*